TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102118

District : மாவட்டம் Tenkasi | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 07/2023 | Date: நாள் 09.10.2023

(i) Act சட்டம்: PC Act 1988 as amended by Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

(a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 09.10.2023
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 12.45 hrs
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.10.2023
Time : நேரம் 15.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.10.2023
Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி
AE, TANGEDCO
Sernthamaram,
20 Km North East.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.ARUNACHALAM

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.KARUPPASAMY

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.05.1998

(d) Nationality : நாட்டினம் INDIAN

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் DRIVER

(g) Address : முகவரி
7/203, MAINROAD,
PANDIYAPURAM,
VELLALANKULAM,
TENKASI DISTRICT

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.ரத்தினம், போர்மென், உதவி மின்பொறியாளர் அலுவலகம், விநியோகம், சேர்ந்தமரம், தென்காசி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமா்ப்பிக்கிறேன். இன்று 09.10.2023-ம் தேதி மாலை 15.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளா் M.பால்சுதா் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது பாண்டியாபுரத்தை சோ்ந்த திரு.K.அருணாசலம் என்பவா் கொடுத்த புகாா் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகாா்தாரா் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சோ்ந்தமரம் உதவி மின்பொறியாளா் அலுவலகத்தில் போா்மெனாக பணிபுரியும் திரு.ரத்தினம் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவா்களின் நடத்தைகளை அறிந்தும் புகாா் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளா் அவா்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 09.10.2023-ம் தேதி மாலை 16.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2023 u/s 7 of the PC Act 1988 as amended by Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு:. அனுப்புநா் K.அருணாசலம், த/பெ. கருபப்பசாமி, 7/203, மெயின்ரோடு, பாண்டியாபுரம், தென்காசி மாவட்டம். பெறுநா் உயா்திரு காவல் துணை கண்காணிப்பாளா் அவா்கள், லஞ்சஒழிப்புதுறை, தென்காசி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு ஏல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Arunachalam
9.10.2023

[signature] 9/10/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளா் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.10.2023
17.15 Hrs

Name: பெயா் M. PAUL SUTHER.
Rank: நிலை D.S.P., Tenkasi

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

அய்யா, நான் பாண்டியாபுரத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 15.11.2021-ம் தேதி வெள்ளாளங்குளம் கிராம சர்வே எண் 139/1Bல் 7.60 செண்ட் இடத்தை திரு.மாரியப்பன் என்பவரிடம் இருந்து கிரையத்திற்கு வாங்கினேன். மேற்படி இடத்தில் வெள்ளாளங்குளம் பஞ்சாயத்தில் வீடு கட்ட அனுமதி பெற்று வீடு கட்டினேன். அதற்கு பஞ்சாயத்தில் வரி நிர்ணயம் செய்து சொத்துவரி நிர்ணயம் செய்துவிட்டார்கள். மேற்படி வீட்டிற்கு புதிய மின் இணைப்பு கேட்டு 21.08.2023-ம் தேதி ஆன்லைனில் மனுசெய்தேன். அதற்கு 01.09.2023ம் தேதி ரூ.5,192/- ஆன்லைனில் செலுத்தினேன். அதன்பிறகு சேர்ந்தமரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து இடத்தை பார்வையிட்டு போல் நட வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். அதன்பின்பு இரண்டு வாரம் கழித்து போர்மேன் திரு.ரத்தினம் எனது செல்போனில் பேசி எஸ்டிமேட் தயாராகிவிட்டது. ஆபிசில் வந்து எவ்வளவு தொகை என்று கேட்க சொன்னார். நானும் 15.09.2023-ம் தேதி சேர்ந்தமரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி பொறியாளர் திருமதி.அனிதா அவர்களிடம் கேட்டபோது அவர் கணினியில் பார்த்து ரூ.24,480/- ஆன்லைனில் கட்ட வேண்டும் என்று சொன்னார். அப்போது என்னிடம் பணம் இல்லாததால் அன்று வேலைக்கு சென்று விட்டு மறுநாள் 16.09.2023-ம் தேதி காலையில் ஆன்லைனில் ரூ.24,480/- பணத்தை கட்டினேன். பின்பு சேர்ந்தமரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி மின் பொறியாளரை பார்த்தபோது பொருள் இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். கடந்த 04.10.2023ம் தேதி போர்மேன் ரத்தினம் அவரது செல்போன் எண் 9698052031 லிருந்து எனது செல்போன் எண் 9360242538க்கு இரண்டு மூன்று முறை தொடர்பு கொண்டு ரூ.3,000/- தந்தால்தான் மின்கம்பம் நடமுடியும் என்று சொன்னார். நானும் தன்னிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டேன். பின்பு கடந்த 07.10.2023-ம் தேதி போர்மேன் ரத்தினம் எனது செல்போனில் தொடர்பு கொண்டு சேர்ந்தமரம் ஆபிசில் வந்து பார்க்கச்சொன்னார். நானும் எனது அப்பா திரு.கருப்பசாமி அவர்களும் சேர்ந்தமரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று போர்மென் ரத்தினத்தை பார்த்தோம். அவர் அதிகாரிகளுக்கு பணம் கொடுக்க வேண்டியதிருக்கு ரூ.5,000/- தந்தால்தான் போல் நட நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என்று சொன்னார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. நான் கூலி வேலைதான் செய்கிறேன் என்று

சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால்தான் போல் நட்டு மின் இணைப்பு கொடுக்கமுடியும் என்று சொன்னார். நானும், எனது அப்பாவும் வேறு எதுவும் சொல்லாமல் வந்துவிட்டோம். நான் நேற்று 09.10.2023ம் தேதி சுமார் 12.45 மணியளவில் சேர்ந்தமரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று போர்மென் ரத்தினத்தை பார்த்தபோது ரூ.5,000/- என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.4,000/- கொடுங்கள் போலை நட்டுவிடலாம் என்று சொன்னார். மேலும் போல் நடுபவர்களுக்கும் செலவுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். பணம் கொடுத்தால்தான் நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என்று சொன்னார். நானும் தற்போது பணம் இல்லை. பணத்தை ரெடி பண்ணிவிட்டு நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு கூடுதலாக அவருக்கு லஞ்சமாக ரூபாய் 4,000/- கொடுக்க விருப்பம் இல்லை. என்னிடம் மின்கம்பம் நட்டு மின் இணைப்பு கொடுப்பதற்கு லஞ்சம் கேட்ட சேர்ந்தமரம் மின்வாரிய போர்மென் திரு.ரத்தினம் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாள்:09.10.2023 இப்படிக்கு (Sd.அருணாசலம்)

Sir, Received the complaint on 09.10.2023 at 15.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.07/2023 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 09.10.2023 at 16.30 hrs. sd.Tr.M.Paul Suther, Deputy Sudpt. of Police, V&AC, Tenkasi.09.10.2023

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகல்களை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

[signature] 9/10/2023
Deputy Sudpt. of Police.
V&AC. Tenkasi.